**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சிறப்புப் பள்ளி – காரைக்குடி காதுகேளாதோருக்கான அரசுப் பள்ளி, சிவகங்கை மாவட்டம் – மாணவ / மாணவியர்கள் குறைவாக பயிலுதல் – நிரந்தரமாக மூடுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடத்தினை இதர அரசு பள்ளிக்கு மாற்றி அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண்: 30** **நாள் 27.09.2016**

**துன்முகி–புரட்டாசி 11,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.245, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 28.11.2005.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2399/சிப.1/2015, நாள் 04.08.2015, 28.09.2015, 30.11.2015 மற்றும் 05.07.2016.

----------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், காரைக்குடி நகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கிவந்த காதுகேளாதோர் அரசு பள்ளியானது மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்க அனுமதித்தும், இதற்கென ஆகும் தொடர் செலவினமாக ரூ.2,24,800/– மற்றும் தொடராச் செலவினமாக ரூ.41,000/–ம் என மொத்தம் ரூ.2,65,800/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் காரைக்குடி, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியில் மிக குறைந்த அளவில் (5 மாணவர்கள் மட்டும்) மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர் எனவும், மேலும், இப்பள்ளிக்கென்று விடுதி வசதியும் இல்லை எனவும், காரைக்குடி நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடத்தில் இப்பள்ளியானது இயங்கி வருவதாகவும், காரைக்குடி, காதுகேளாதோருக்கான அரசுப் பள்ளிக்கு 2 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஒரு சமையலர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் காலியாக உள்ளது எனவும், ஒரு சமையலர் பணியிடத்தினை புதுக்கோட்டை காதுகேளாதோர் அரசு நடுநிலை பள்ளிக்கு மாற்றிட அனுமதிக்குமாறும், இக்கருத்துருவினை ஏற்கும்பட்சத்தில் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் காரைக்குடி, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியானது, புதுக்கோட்டை பள்ளியிலிருந்து 50 கீ.மீ. தொலைவில் உள்ளது எனவும், காரைக்குடி, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியில் பயிலும் 5 மாணவர்களை புதுக்கோட்டை, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளிக்கு மாற்றம் செய்யும்பட்சத்தில், அம்மாணவர்களை புதுக்கோட்டை அரசுப் பள்ளியில் உள்ள விடுதியில் தங்கி கல்வி பயில அனுமதிக்கலாம் எனவும், எனவே, மாணவர்களின் வருகை எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால், காரைக்குடி, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியினை நிரந்தரமாக மூட ஆணை வேண்டியும், இப்பள்ளியினை நிரந்தரமாக மூடப்படும் பட்சத்தில் அங்கு கல்வி பயிலும் மாணவர்களை அருகில் உள்ள புதுக்கோட்டை, காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் கல்வி பயில அனுமதி வழங்கவும் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

[த.பி.பா.]

4. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இப்பள்ளிக்கென்று அனுமதிக்கப்பட்டுள்ள 2 இடைநிலை ஆசிரியர் பணியிடத்தினை ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை தருமபுரி, காது கேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளிக்கும், ஒரு இடைநிலை ஆசிரியர் மற்றும் சமையலர் பணியிடத்தை புதுக்கோட்டை, காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளிக்கும் மாற்றிட அனுமதித்து ஆணை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியின் மாணவர்களின் வருகை எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இப்பள்ளியினை நிரந்தரமாக மூட அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி பள்ளியில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களை அருகில் உள்ள புதுக்கோட்டை, காதுகேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயில அனுமதியும் வழங்கப்படுகிறது:-

(அ) காரைக்குடி காது கேளாதோருக்கான அரசுப் பள்ளி மீண்டும் தேவையெனக் கோரக்கூடாது.

(ஆ) மாணவர்கள் மாற்றம் செய்யப்படுவதால், புதுக்கோட்டை, காதுகேளாதோருக்கான அரசு பள்ளிக்கு கூடுதல் நிதி ஏதும் வழங்கப்படமாட்டாது.

(இ) காலியாகவுள்ள இரு இடைநிலை ஆசிரியர் பணியிடமும் கலைத்துவிடப்படும் (மாற்றம் செய்யப்படாது)

(ஈ) இரண்டு சமையலர் பணியிடங்கள் தலா ஒன்று வீதம் புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தினை பொறுத்தவரை ஒரு சமையலர் பணியிடம் நிரப்பப்படவில்லை. இப்பணியிடத்தினை காரைக்குடி பள்ளியிலிருந்து நிரப்பலாம். அவ்வாறு நிரப்பிய பின்னர் காரைக்குடி பள்ளியில் உள்ள சமையலர் காலிப்பணியிடம் கலைக்கப்படும்.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அலுவல் சார்பற்ற எண் 48691/நிதி(சந)/2016, நாள் 16.09.2016–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**<u>நகல்:</u>**

முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்